# பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 131** **நாள்:14.10.2017**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் மூழுவீச்சில் நடைபெற்று வருகிறது.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத் துறை சார்பாக டெங்கு காய்ச்சலை தடுக்க பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்திய மருத்துவமுறை பாரம்பரிய மருந்தான நிலவேம்பு குடிநீர் அனைத்து மாநகராட்சி ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், பேருந்து நிலையங்கள், இரயில் நிலையங்கள், அம்மா உணவகங்களிலும், மருத்துவ முகாம்களிலும் தொடர்ந்து வழங்கப்பட்டு வரப்படுகிறது. மாநகராட்சியின் அனைத்து மண்டலங்களிலும் உள்ள அரசு மற்றும் மாநகராட்சி மருத்துவமனைகள், தனியார் மருத்துவமனைகள், பகுப்பாய்வு கூடங்களிலிருந்து காய்ச்சல் கண்டவர்களின் விவரங்கள் தினந்தோறும் பெறப்பட்டு உடன் உரிய மண்டல சுகாதாரத் துறை மூலமாக கொசுத் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு சம்மந்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. சுகாதாரப் பணியாளர்கள் வாரந்தோறும் அனைத்து வீடுகளிலும் கொசுப்புழு வளரிடங்களான மேல்நிலை/கீழ் நிலை தொட்டி, கிணறு ஆகியவற்றில் கொசுப்புழுக்கள் அதனைக் கண்டறிந்து அழித்து வருகின்றனர். தேவையற்ற பொருட்களான டயர்கள், உடைந்த பிளாஸ்டிக் குப்பைகள் போன்றவை அப்புறப்படுத்தப்பட்டு வரப்படுகிறது. அரசு மற்றும் மாநகராட்சி கட்டிடங்கள், புதிய கட்டுமான பணிகள் நடைபெறும் இடங்களிலும் ஆய்வு செய்யப்பட்டு, கொசுப்புழுக்கள் இருப்பின் அழிக்கப்பட்டு வரப்படுகிறது. கல்வி நிறுவனங்கள், மக்கள் பெருவாரியாக கூடும் இடங்கள் போன்ற அனைத்து பகுதிகளிலும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு, நிலவேம்பு குடிநீர், விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களும் வழங்கப்பட்டு வருகிறது. மாணவ, மாணவிகளுக்கு சுகாதார தூதர் விழிப்புணர்வு அட்டைகள் வழங்கப்பட்டு, சுகாதார தூதர்களாக அறிவிக்கப்பட்டு வருகின்றனர்.

தமிழக அரசால் ஒவ்வொரு வியாழக்கிழமையும் டெங்கு காய்ச்சல் தடுப்பு தினமாக அறிவிக்கப்பட்டு உள்ளது. பெருநகர மாநகராட்சி ஆணையர், முனைவர். தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் மாநகராட்சி முழுவதும் அனைத்து துறையினரும் இணைந்து தீவிர கொசு ஒழிப்பு பணியை மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளார். அதன் பேரில், பெருநகர மாநகராட்சியின்

அனைத்து மண்டலங்களிலும் உள்ள 200 கோட்டங்களிலும் நேற்று முதல் சுகாதாரத் துறையுடன் மாநகராட்சியின் மற்ற துறைகளான துப்புரவுத் துறை, பொறியியல் துறை மற்றும் தன்னார்வ தொண்டர்களுடன் இணைந்து பல்வேறு கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக, புதிதாக வடிவமைக்கப்பட்ட கொசுப்புழுக்கள் உற்பத்தியாக வாய்ப்பாக இருக்கும் முக்கியமான தேவையற்ற பொருட்கள் மற்றும் கொசுப்புழுக்கள் உற்பத்திக்கு ஏதுவாக இருக்கும் வீட்டமைப்புகள் பற்றி வண்ணப்படங்களுடன் கூடிய விளக்கத்துடன் உள்ள ஒரு இலட்சம் விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் அச்சிடப்பட்டு, மண்டல சுகாதார அலுவலர்கள் தலைமையில் துப்புரவு அலுவலர்கள் மற்றும் சுகாதார ஆய்வாளர்கள் கொண்ட குழுவால் மண்டலம் 1 முதல் 15 வரை உள்ள திரையரங்குகள், வணிக வளாகங்கள், தங்கும் விடுதிகள், திருமண மண்டபங்கள், அம்மா உணவகங்கள் மற்ற வணிக நிறுவனங்கள், தொழிற் நிறுவனங்கள், குடியிருப்பு பகுதிகள், பூங்காக்கள், குடிசைப் பகுதிகள், பொது மக்கள் அதிகமாக கூடும் இடங்களில் கடந்த வியாழன் முதல் ஒரு வாரத்திற்குள் ஒட்டி, விழிப்புணர்வு ஏற்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த தீவிர கொசு ஒழிப்பு பணியில் இன்று (14.10.2017) 200 கோட்டங்களிலும், 1 கோட்டத்திற்கு 1 குழு வீதம் மொத்தம் 200 குழுக்கள் பயன்படுத்தப்பட்டன. இப்பணியில் 2562 மலேரியா பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். இந்த மலேரியா பணியாளர்களை கொண்டு 1,22,320 வீடுகள் ஆய்வு செய்யப்பட்டு, அதில் 582 வீடுகளில் உள்ள கொசுப்புழுக்கள் அழிக்கப்பட்டன. 223 கொசு மருந்து அடிக்கும் கைத்தெளிப்பான்களும், 189 கையினால் புகை பரப்பும் இயந்திரங்களும், 21 வாகனம் மூலம் புகை பரப்பும் இயந்திரங்களும் பயன்படுத்தப்பட்டன. பொது மக்களுக்கு டெங்கு காய்ச்சல் சம்மந்தமாக விழிப்புணர்வு எற்படுத்துவதற்காக 152 இடங்களில் கொசுப்புழுக்கள் உருவாகும் விதங்கள், அவற்றை தடுக்கும் முறைகள் குறித்து கண்காட்சி அமைத்து விளக்கப்பட்டது. 173 அரசு அலுவலகங்களில் ஆய்வு செய்யப்பட்டு, கொசுப்புழு இருந்த கட்டிடங்களில், கொசுப்புழுக்கள் அழிக்கப்பட்டு விழிப்புணர்வு எற்படுத்தப்பட்டது.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**